# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 19/2016** **நாள் : 29/09/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

## 4.10.2016 ஒப்பந்த தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

தமிழக அரசு 28.9.2016 அன்று மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு போனஸ் அறிவிப்பினை அறிவித்துள்ளது. அதில் ஒரு பகுதியாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ4000/- கருணைத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பினை அறிவித்துள்ளது. இது அரசின் பகட்டான அறிவிப்பே தவிர, இதை நடைமுறைப்படுத்த ஒப்பந்த தொழிலாளர்களே இல்லை என்ற வாதத்தை முன் வைக்க தமிழக மின் வாரியம் யாருக்கு இந்த ரூ.4000/-த்தை அளிக்கப் போகிறது என்பது தான் நாம் எழுப்பும் வினாவாகும்.

23.9.2016 அன்று நடைபெற்ற போனஸ் பேச்சு வார்த்தையிலேக் கூட ஒப்பந்த தொழிலாளர்களே இல்லை என்ற வாதத்தை முன்வைக்காதீர்கள். அனல், புனல், பொது கட்டுமானம், மின் விநியோக வட்டங்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு அவர்களுக்கும் கருணைத் தொகை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வாதிட்டோம்.

தமிழக அரசும், மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளிகள் பணியாற்றுகிறார்கள், அவர்களுக்கும் ரூபாய் 4000/- கருணைத் தொகையாக வழங்கு என்று உத்தரவிட்ட பின்னரும், அதற்கு தடையாய் நந்தியாய் நிற்கும் மின்வாரியத்தை உண்மையைச் சொல்லச் செய்து ஒப்பந்த தொழிலாளிகளை அங்கீகரித்து அவர்களுக்கு கருணைத் தொகை பெற்று தர 4.10.2016 இல் தமிழகம் முழுவதும் கண்டன முழுக்கத்தை முன் வைத்து நமது கோரிக்கையின் பால் வாரியத்தின் கவனத்தை ஈர்த்திடுவோம்.

ஒப்பந்த தொழிலாளர்கள் போனஸ் போராட்டத்தில் வெற்றி பெருவது என்பதே அவர்களை அடையாளங்காட்ட சிறந்த வழி என்பதை உணர்ந்து இந்த போராட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

# தமிழக அரசே.... போனஸ் அறிவிப்பில்
# ஒரு கண்ணில் வெண்ணெய்....!
# மறு கண்ணில் சுண்ணாம்பா ?

# மாபெரும் ஆர்ப்பாட்டம்

இடம்

நாள் 04.10.2016
நேரம்................

அன்பார்ந்த தோழர்களே ! அலுவலர்களே ! பொறியாளர்களே ! வணக்கம்

**மின்வாரியத்தில்......**

- **மின் உற்பத்திக்கும், மின் விநியோகத்திற்கும், உள் கட்டுமான வளர்ச்சிக்கும் அச்சாணிகளாய் விளங்கும் ஒப்பந்த ஊழியர்களை புறக்கணிக்காதே....**
- **40,000 பதவிகள் காலியுள்ள இடங்களில் எலெக்ட்ரிசியன்களாய், வயர்மேன்களாய், கேபிள் ஜாய்ன்டர்களாய், கம்பம் நட குழி தோண்டும் அன்றாடங்காய்சிகளாய், அலுவலகங்களில் டைப்பிஸ்ட்களாய், மின்தடை நீக்க மையங்களில் தொலைப்பேசி இயக்குனர்களாய் படித்து விட்டு வேலை இல்லா திண்டாடத்தின் நெருப்பில் வெந்து கொண்டிருக்கும் மின்வாரிய ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு போனஸ் வழங்கிடு**
- **வாரியத்தின் முன்னேற்றத்திற்கும், ஒப்பந்த ஊழியர்களுக்கும் தொடர்பு உள்ளது என்பதை மறந்து மின் வாரியத்தில் உள்ள ஒப்பந்த ஊழியர்களை புறக்கணிக்காதே...**
- **மின் வாரியத்தில் ஒப்பந்த ஊழியர்களை இல்லை என்றால் 40000 பதவிகள் காலியுள்ள இடங்களில் உள்ள பணி சுமையை சுமப்பது யார்?**

அரசு அறிவித்துள்ள வாரிய ஒப்பந்த ஊழியர்களுக்கான ரூ.4000/- போனஸை மின் வாரியம் எந்த ஒப்பந்த தொழிலாளிக்கு வழங்கப்போகிறது? என்று வாரிய தலைமைக்கே வெளிச்சம். ஆகவே மின் வாரிய ஒப்பந்த தொழிலாளியை அடையாளம் கண்டு அவர்களுக்கு போனஸ் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம்.

மின் வாரிய ஊழியர்களே நம்முடைய தொழிலாளி, நம்முடைய சகோதரன், நம்முடைய தோழன் ஆட்சியாளர்களால் சுரண்டுவதையும், அதிகாரிகளால் அலட்சியப் படுத்தப்படுவதையும் அனுமதிக்காலாமா?

**வாருங்கள் அவர்களுக்காக நாம்! நமக்காக அவர்கள்! என்ற ஒற்றுமை முழக்கத்தோடு ஒன்று படுவோம்! போராடுவோம்... வெற்றி பெறுவோம்.....**

ஒப்பந்த ஊழியர், நிரந்தர ஊழியர் ஒற்றுமை வென்றிட அனைத்து பகுதி ஊழியர்களும் கரங்கோர்ப்போம், ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்....

இவண்

CITU

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
. . . . . . . . . . . . . . கிளை